# அருகிவரும் தேயிலைச் செய்கையினால் பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் சூழல், சமூக மற்றும் பொருளாதாரப் பாதிப்புக்கள்: அப்புத்தளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட தேயிலை பெருந்தோட்டங்களை மையப்படுத்திய ஆய்வு.

**எம்.ஜே. ரிஸ்வின் ரீஸா**
South Eastern University of Sri Lanka
rizvinreeza@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்:**

உலகளாவிய ரீதியில் இலங்கை நாட்டை 'பச்சைத்தங்கம்' என அழைப்பதற்கு காரணம் தேயிலை உற்பத்தி என்றால் மிகையாகாது. அவ்வகையில் இன்று சமூகத்தில் மக்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறுப்பட்ட சவால்களில் பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் சூழல், சமூகப் பொருளாதாரப் பாதிப்புக்கள் முக்கியமானவையாக இனங்காணப்பட்டுள்ளன. இலங்கையில் பதுளை மாவட்டத்தினை நிர்வாகத் தலைநகராகக் கொண்டதாக அப்புத்தளை பிரதேசமானது காணப்படுகின்றது. அவ்வகையில் இலங்கையில் தேசிய வருமாத்தினை ஈட்டித்தரும் தொழில்களில் ஒன்றாகப் பெருந்தோட்டத்துறை சிறப்புற்று காணப்படுகின்றது. அப்புத்தளைப் பிரதேசத்தில் தேயிலைச் செய்கையானது பௌதீக, மானிடக்காரணிகளால் வெகுவாக அழிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே அருகிவரும் தேயிலைச் செய்கையினால் பெருந்தோட்ட மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். இவ்வாய்வின் நோக்கமானது அப்புத்தளை பிரதேச பெருந்தோட்ட மக்களின் சூழல்,சமூகப் பொருளாதார பிரச்சினைகளை அடையாளம் காண்பதும் அதற்கான தீர்வுகளை முன்வைப்பதுமாகும். இவ்வாய்வானது முதலாம்நிலை மற்றும் இரண்டாம்நிலைத் தரவுகளை மையமாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டது. முதலாம் நிலைத்தரவுகளாக: களஆய்வு, நேர்முகம் காணல், நேரடி அவதானிப்பு, வினாக்கொத்துக்கள் என்பன பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக அப்புத்தளை பிரதேச செயலகத்திற்குற்பட்ட தேயிலை பெருந்தோட்ட மக்களுக்கு எளிய எழுமாற்று முறை மூலமாக 100 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. இரண்டாம்நிலைத் தரவுகளாக பிரதேச செயலகப்பிரிவின் அறிக்கைகள், சஞ்சிகைகள், புள்ளி விபரத்திரட்டுக்கள், ஆய்வுக்கட்டுரைகள், இணையம் என்பன பயன்படுத்தப்பட்டன. இத்தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக Ms Excel, GIS, SPSS போன்ற மென்பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்வின் மூலம் அடையாளங்கண்ட சூழல் பிரச்சினை என தேயிலைச்செய்கையின் அழிப்பு காரணமாக சிறியளவில் மண்சரிவு இடம்பெறல் மற்றும் சமூகப்பாதிப்புக்களாக சிறந்த வீட்டுவசதி இன்மை, தோட்டங்களுக்கிடையிலான முரண்பாடு, கல்விவசதிகளின்மை, வேறுத் தோட்டங்களுக்கு இடம்பெயர்தல்,தொழில் இன்மையால் மனஉளைச்சல் ஏற்படல் போன்றனவும் பொருளாதாரப் பிரச்சினைகளாக ஒரு நாளுக்கான வருமானம் போதாமை, வறுமைநிலை, போதியளவு நிவாரணம் கிடைக்காமை, போதிய முதலீடு இன்மை போன்றனவும் அடையாளங் காணப்பட்டன. எனவே இவ்வாறான பிரச்சினைகளைத் தீரப்பதற்காக விழப்புணர்வுத் திட்டங்களையும், பெருந்தோட்ட முகாமைத்துவத்தையும் அரசு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். இதன்மூலமே நாட்டில் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

***பிரதான சொற்பதங்கள்***: *பெருந்தோட்ட முகாமைத்துவம்,நிலைத்துநிற்கும் அபிவிருத்தி, தேயிலைச்செய்கை*


## 1. அறிமுகம்

இலங்கையில் சுமார் 150 வருடங்களுக்கு முன்னர் இருந்தே தேயிலை பயிரிடப்பட்ட அதேவேளை உலகம் முழவதும் இச்சிறிய தீவின் பெயரும் பிரபல்யமடைய காரணமாக இருந்தது எனலாம். இலங்கைத் தேயிலையின் தந்தை என்றழைக்கப்படும் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த பெருந்தோட்ட முதல்வராக விளங்கிய ஜேம்ஸ் டெய்லர் 1867 ஆம் ஆண்டில் மத்திய மலைநாட்டின் கண்டி மாவட்டத்தில் ஹேவாஹெட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள லூல்கெந்திரா

தோட்டத்தில் முதன் முதலில் வர்த்தக நோக்கில் தேயிலையைப் பயிரிட்டதிலிருந்தே இலங்கைக்கு தேயிலை அறிமுகமானது. அவ்வகையில் தேயிலை ஏற்றுமதியில் மூன்றாவது பெரிய நாடாக விளங்கும் இலங்கையின் முக்கிய சந்தைகளாக மத்திய கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த பெரும்பாலான நாடுகளும் தனி ஒரு நாடான ரஸ்யாவும் உள்ளன. இவை தவிர ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ஜப்பான், கனடா, செக் குடியரசு, இத்தாலி முதலியவை உள்ளிட்ட பல நாடுகள் இலங்கையின் தேயிலையை விரும்பி இறக்குமதி செய்கின்றமைக் குறிப்பிடத்தக்க ஓர் விடயமாகும். இன்று கிட்டத்தட்ட வருடம் ஒன்றுக்கு 300 மில்லியன் கிலோ தேயிலை இலங்கையில் உற்பத்தி செய்யப்படுவதுடன் இத்தொழிற்துறையில் நம் நாட்டின் 10 சதவீதமானோர் ஈடுபடுகின்றனர். (இணையம்)

இலங்கையில் பெருந்தோட்டக்காணிகள் வருடாந்தம் 1650 ஹெக்டேயர் வீழ்ச்சியடைந்து செல்கின்றன. இவ்வாறான நிலவரம் நீடிக்குமாயின் அடுத்துவரும் 30 ஆண்டுகளில் சுமார் 30,000 ஹெக்டேயர் காணிகள் பெருந்தோட்டச் செய்கையில் இருந்து நீக்கப்பட்டுவிடும் (நமது மலையகம், 2014) இந்தவகையில் இவ்வாய்வினூடாக சூழலையும் தேயிலைச் செய்கையில் இப்பிரதேசமக்களின் வாழ்வில் சூழல், சமூகப் பொருளாதாரரீதியாக ஏற்படுத்திய பாதிப்பு போன்ற பிரச்சினைகள் ஆராயப்பட்டுள்ளன. அத்துடன் தேயிலைத் தோட்டங்கள் அழிவடைவதற்கான காரணிகளை அடையாளங் காணல், அதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள், சீராக்கும் வழிமுறைகள் போன்றவற்றினை அடையாளங் காண்பதை மையமாகக் கொண்டது.

## 2. ஆய்வுப்பிரதேசம்




Source: Retrieved by researcher

அப்புத்தளை பிரதேசமானது $6^{0}46'4''$ வடக்கேயும், கிழக்கே $80^{0}57'31''$ ற்கும் இடையில் அமைந்துள்ளது. மொத்த சனத்தொகை 54,989 ஆகவும், பெருந்தோட்ட மக்களின் எண்ணிக்கை 16,215 ஆகவும் காணப்படுகின்றனர் (அப்புத்தளை பிரதேச செயலக மூலவளத்திரட்டு). ஆகவே இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்தியில் பதுளை மாவட்டத்தில் 14,043,682 kg தேயிலை உற்பத்தி செய்யப்படும் அதேவேளை அப்புத்தளைப் பிரதேசத்தில் 3,770,704kg தேயிலை உற்பத்தி செய்யப்படுகின்றன.(Statistical Information Plantation Crops, pps-20 2012). அப்புத்தளையில் தேயிலைச் செய்கையை பிரதான வாழ்வாதாரத் தொழிலாகவும் கொண்டிருப்பதன் காரணமாக அதிகமான தேயிலைத் தோட்டங்கள் இயங்கி வருகின்றன. இங்கு 38 தேயிலைத் தோட்டங்கள் இயங்கி வருகின்றன(புள்ளிவிபரத் திரட்டு, 2012) 430.5 $km^2$ பரப்பளவைக் கொண்டது. கடல் மட்டத்திலிருந்து உயரம் 1400 அடிகளாகும்.

வருடாந்த மழைவீழ்ச்சி 2000 – 2500 mm ஆகும். வெப்பநிலை $20^0c - 26^0c$ வரையாகும். மண்ணின் வகை – அதிகமான பகுதிகளில் செங்கபில ஈரக்களி மண்ணும் ஏனைய பகுதிகளில் செம்பூரான் ஈரக்களி மண்ணும் காணப்படுகின்றது.

## 3. ஆய்வுப்பிரச்சினை

இவ் ஆய்வுப் பிரதேசமானது பின்வரும் சூழல்,சமூக , பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றமை காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாய்வின் மூலம் அடையாளங்கண்ட சூழல் பிரச்சினை என தேயிலைச்செய்கையின் அழிப்பு காரணமாக சிறியளவில் மண்சரிவு இடம்பெறல் மற்றும் சமூகப்பாதிப்புக்களாக சிறந்த வீட்டுவசதி இன்மை, தோட்டங்களுக்கிடையிலான முரண்பாடு, கல்விவசதிகளின்மை, வேறுத் தோட்டங்களுக்கு இடம்பெயர்தல், தொழில் இன்மையால் மனஉளைச்சல் ஏற்படல் போன்றனவும் பொருளாதாரப் பிரச்சினைகளாக ஒரு நாளுக்கான வருமானம் போதாமை, வறுமைநிலை, போதியளவு நிவாரணம் கிடைக்காமை, போதிய முதலீடு இன்மை போன்றனவும் அடையாளங் காணப்பட்டன.

## 4. ஆய்வு நோக்கம்

### 4.1 பிரதான நோக்கம்

இவ்வாய்வின் பிரதானமான நோக்கமாக அப்புத்தளை பிரதேசத்தில் அருகிவரும் தேயிலைச் செய்கையினால் பெருந்தோட்ட மக்களின் சூழல், சமூகப் பொருளாதார பிரச்சினைகளை அடையாளம் காண்பதாகும்.

### 4.2 துணை நோக்கம்

1. ஆய்வுப் பிரதேசத்தில் பௌதீக மற்றும் மானிட காரணிகளின் செயற்பாட்டின் மூலம் தேயிலைச் செய்கை அழிவடைவதற்கான காரணங்கள் கண்டறியப்பட்டது.

2. எதிர்க்காலத்தில் தேயிலைச் செய்கை அருகி வருவதனை குறைக்கும் வகையில் முகாமைத்துவம் செய்வதற்கான திட்டங்களை இனங்காணப்பட்டது

## 5 ஆய்வு முறையியல்

ஆய்வொன்றினை மேற்கொள்வதற்கு தரவுகளும் தகவல்களும் இன்றியமையாதனவாக உள்ளன. ஒரு ஆய்வின் சரியான முடிவு திரட்டப்படும் தரவுகளின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது. இவ் ஆய்வுக்கான தரவுகள் முதனிலைத் தரவு மூலங்கள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களிலிருந்தும் பெறப்படவுள்ளன. அதாவது எளிய எழுமாற்று மாதிரி முறைமையின் கீழ் அளவுசார் மற்றும் பண்புசார் அடிப்படைகளில் ஆய்வுக்கான முதனிலைத் தரவுகள் பெறப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இரண்டாம் நிலைத்தரவு மூலங்களும் பயன்படுத்தபட்டுள்ளன.

### 5.1 தரவு சேகரிப்பு

#### 5.1.1 முதனிலைத்தரவு மூலங்கள்

முதலாம் நிலைத்தரவுகளானவை அவதானிப்பு, வினாக்கொத்து போன்ற முறைகளின் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன. ஆய்வு பிரதேசத்தில் 25 கிராம சேவகர் பிரிவுகளும் காணப்படுகின்றது. இங்கு மொத்த சனத்தொகை 54,989 ஆகவும், பெருந்தோட்ட மக்களின் எண்ணிக்கை 16,215 ஆகவும் காணப்படுகின்றது. இங்கு 38 தேயிலைத் தோட்டங்கள் இயங்கி வருகின்றன.

(அப்புத்தளை பிரதேச செயலக மூலவளத்திரட்டு) இக் கிராம சேவகப் பிரிவுகளிலேயே எளிய எழுமாற்று மாதிரி முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு 100 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு ஆய்வுக்கான தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. அத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுத் தலைப்போடு தொடர்பான 5 நபர்களுடனும் இடம் பெற்ற நேர்காணல் ஊடாகவும் ஆய்வுக்குத் தேவையான தகவல்கள் சேரிக்கப்பட்டன.

### 5.1.2 இரண்டாம் நிலைத்தரவு மூலங்கள்


இரண்டாம்நிலைத் தரவுகளாக முன்னைய ஆய்வாளர்களினால் வெளியிடப்பட்ட நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், பத்திரிகைகள், அறிக்கைகள், சஞ்சிகைகள், இணையத்தளம், தொலைக்காட்சி, புள்ளிவிபர அறிக்கை, தேசிய பெருந்தோட்ட அமைச்சு மற்றும் Statistical Information Plantation Crops போன்ற திணைக்களக் குறிப்புக்கள், இடவிளக்கவியல் படங்கள், செய்மதி விம்பங்கள் என்பன பெறப்பட்டு இவ்வாய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

### 5.2 தரவுப்பகுப்பாய்வு

சேகரிக்கப்பட்ட தகவல்கள் எளிய புள்ளிவிபரவியல் முறையான MS Excel இனை பயன்படுத்தியும் Arc GIS கணினி மென்பொருளையும் பிரயோகித்தும் படங்களாக வரையப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டதனூடாகப் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் இவ்வாய்வின் நோக்கங்கள் அடையப்பட்டுள்ளன.

## 6. பெறுபேறுகளும் முடிவுரையும்


அப்புத்தளைப் பிரதேசத்தில் தேயிலைச் செய்யையானது முன்னர் இருந்ததை விட அழிவடைந்தமையை மக்களிடம் பெறப்பட்ட வினாக்கொத்துக்களின் அடிப்படையில்




பெறப்பட்டது. அதே வேளை இலங்கை நாட்டில் பெருந்தோட்டத்துறை சிறப்புற்று காணப்பட்டப் போதிலும் அதன் இழப்பு அதனை நம்பி வாழும் மக்களின் சூழல், சமூகப் பொருளாதார ரீதியான பிரச்சினைகளானது பாதகமான எதிர்விளைவுகளை அடையப்பெற்றுள்ளமை இவ்வாய்வின் ஊடாகப் கண்டறியப்பட்ட உண்மையாகும்அப்புத்தளைப் பிரதேசத்தில் தேயிலைச் செய்கையானது பௌதீகக் காரணிகளை விட மானிடக் காரணிகளாலேயே அழிவடைந்தமை குறிப்பிடத்தக்கது என்பதனை பின்வரும் வரைப்படம் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.


Source : Field Data Collection 2016

அதன்படி அப்புத்தளைப் பிரதேசத்தில் தேயிலைச் செய்கையானது 73% சதவீமானவை மானிடக் காரணிகளாலேயே அழிவடைந்தமைக் ஆய்வினுாடாக தெரிய வந்தது. அத்துடன் 17% சதவீமான பௌதீகக் காரணிகளாலேயே தேயிலைச் செய்கை அழிவடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை மக்களிடம் இருந்து பெறப்பட்ட 100 வினாக் கொத்துக்களின் அடிப்படையில் அதிகமாக மானிடக் காரனிகளாலேயே தேயிலைச் செய்கை வெகுவாக அழிவடைந்துள்ளது. அதிலும் அதிகமாக மரக்கறிப் பயிர்ச்செய்கையினால் 38% சதவீதம் அழிவடைந்த அதேவேளை காடழிப்பு குறைவாகவே நிகழ்ந்துள்ளமை கண்டறியப்பட்ட உண்மையாகும்.




Source: Questionnaire survey 2016


ஆய்வுப் பிரதேசத்தில் அடையாளங் காணப்பட்ட சமூக பிரச்சினைகள் மூலம் பாதிக்கப்படும் மக்கள் தொடர்பான வரைப்படமானது பின்வறுமாறு அமையப் பெற்றது.




Source: Questionnaire survey 2016

ஆய்வுப் பிரதேசத்தில் அடையாளங் காணப்பட்ட சமூகப் பிரச்சினைகளில் குறிப்பாக 38% சதவீத மக்கள் வீட்டு வசதியின்மையினால் அதிகமாகப் பாதிப்படைகின்றனர். மற்றும் தேயிலைத் தோட்டங்கள் அழிவடைவதால் தோட்டங்களுக்கிடையில் முரண்பாடுகளும் 11% காணப்பட்டன. ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட மற்றுமொரு விடயம் என்னவெனில் தேயிலைத் தோட்டங்கள் அழிவடைகின்மையால் ஏற்கனவே அங்கு வாழ்ந்த மக்களில் 13% சதவீதமானோர் வேறு இடங்களுக்கு இடம்பெயர நேரிட்டமையாகும்.

ஆய்வுப் பிரதேசத்தில் அடையாளங் காணப்பட்ட பொருளாதார பிரச்சினைகள் மூலம் பாதிக்கப்படும் மக்கள் தொடர்பான வரைப்படமானது பின்வறுமாறு அமையப் பெற்றது




Source: Questionnaire survey 2016

ஆய்வுப் பிரதேசத்தில் அடையாளங் காணப்பட்ட பொருளாதாரப் பிரச்சினைகளில் அதிகமாக வறுமையினால் 42% சதவீத மககள் வறுமையினால் பாதிப்படைந்துள்ளனர். குறிப்பாக 33% சதவீத மக்கள் வருமானம் போதாமையினால் அதிகமாகப் பாதிப்படைகின்றனர். ஏனெனில் குறிப்பிட்ட சிறியத்தொகை வருமானத்தைக் கொண்டு பெரிய குடும்பங்கள் தனது குடும்பத்தைக் கொண்டு செல்வது என்பது சிரமமான விடயமாகும்.

இந்தவகையில் ஆய்வுப்பிரதேச களநிலைகளை கவனத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு பின்வரும் சாத்தியமான விதந்துரைப்புக்களை முன்வக்க முனைகிறது. பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மக்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்களையும், சிறந்த வீட்டு வசதிகள் மறறும் பொருளாதார, கல்வி மேம்பாட்டு திட்டங்களையும் மேற்கொள்ளும் அதேவேளை வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில் மாத்திரம் தேயிலை பயிரிடல்,வேறு தொழில் பயிற்சிகளை வழங்கல், நாளாந்த சம்பளத்தை அதிகரிப்பதினூடாக தொடர்ந்து தேயிலைத் தோட்டங்களிலேயே பணிபுரிதல், அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளும் போது பெருந்தோட்டத்துறை மற்றும் மக்களின் நிலை போன்றவற்றை கவனத்தில் எடுத்தல் போன்ற முகாமைத்துவ செயற்பாடுகளை அரசு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இதனூடாக தேயிலை உற்பத்தியும் அதிகரிப்பதோடு அதனை பிரதான வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் மக்களின் வாழ்க்கையும் எழில் மிக்கதாக மாறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## 7. உசாத்துணை

1. கணேசமூர்த்தி,எம்.மலையக மக்களின் சமூகப் பொருளாதாரம் ஒரு வரலாற்றுப் பார்வை, (2010): சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு, கொழும்பு.
2. கீதபொன்கலன்,ச.இருபத்தோராம் நூற்றாண்டில் மலையகத் தமிழர் எதிர்நோக்கும் சவால்கள், (2004): லியோ மார்கா ஆஸ்ரம்: பண்டாரவளை.
3. Statistical Information Plantation Crops, Pps-20 2012: Ministry Of Plantation Industries. Colombo 2.